# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

***

**கண்டியிலுள்ள இந்திய துணை உயர் ஸ்தானிகராலயம் ஸ்தாபிக்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு விசேட சின்னம் அறிமுகம்**

கண்டியில் உள்ள இந்திய துணை உயர் ஸ்தானிகராலயம் ஸ்தாபிக்கப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவடைந்தமையை குறிக்கும் முகமாக விசேட சின்னம் ஒன்றினை வெளியிடும் நிகழ்வு 2023 மே 26 ஆம் திகதி கண்டியிலுள்ள துணை இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

2. இந்நிகழ்வில் இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே அவர்கள் குறித்த சின்னத்தை மெய்நிகர் மார்க்கமூடாக வெளியிட்டு வைத்தார். கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் எம் வேலு குமார் அவர்கள் இந்நிகழ்வில் விசேட விருந்தினராக கலந்து கொண்ட அதேவேளை, பல்வேறு சமூக மற்றும் கலாசார அமைப்புகளின் பிரதிநிதிகள், இந்திய புலம்பெயர் சமூகத்தின் உறுப்பினர்கள் மற்றும் இந்தியாவின் நண்பர்கள் உள்ளிட்ட பல்வேறு பிரமுகர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

3. இங்கு உரை நிகழ்த்திய உயர் ஸ்தானிகர், கடந்த 100 ஆண்டுகளாக கண்டியில் உள்ள துணை இந்திய உயர் ஸ்தானிகராலயத்துக்கு பல்வேறு வகையிலான ஆதரவையும் வழங்கி வருகின்றமைக்காக இலங்கை அதிகாரிகளுக்கு, நன்றியினை தெரிவித்திருந்தார். கண்டியில் உள்ள துணை இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஸ்தாபிக்கப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளமை மட்டுமல்லாமல் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகளும் நிறைவடைகின்றமையால் இந்தியா-இலங்கை இடையிலான இருதரப்பு உறவில் 2023 ஆம் ஆண்டு மிகவும் முக்கியம் வாய்ந்த ஆண்டாகும் என்று உயர் ஸ்தானிகர் மேலும் குறிப்பிட்டார். இதற்கு மேலதிகமாக இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் மக்கள் இலங்கைக்கு வருகைதந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்தமையும் 2023இல் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்நிலையில் இலங்கையின் ஒட்டுமொத்த அபிவிருத்தியில் இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் மக்களால் வழங்கப்பட்டிருந்த பங்களிப்பினை நினைவூட்டிய உயர் ஸ்தானிகர், இரு நாடுகளினதும் மக்களின் நல்வாழ்வுக்காக ஒன்றிணைந்து செயல்படுவதற்கு இந்தியாவின் உறுதிப்பாட்டினை வலியுறுத்தினார்.

4. குறித்த சின்னமானது MyGovஆல் நடத்தப்பட்ட சின்னம் வடிவமைப்பு போட்டியூடாக தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் இப்போட்டியில் 470 பேர் பங்குபற்றியிருந்தார்கள். இவர்களில், திரு ராஜீஷ் அகமத் பட் அவர்களால்

வடிவமைக்கப்பட்ட சின்னம் வெற்றி பெற்றதுடன் இந்த சின்னம் இந்திய இலங்கை தேசியக் கொடிகளின் நிறங்களையும் இருநாடுகளினதும் தேசிய சின்னங்களையும் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது.

5. இலங்கையில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றும் இந்திய வம்சாவளி தொழிலாளர்களின் நலன்புரிக்கான சேவைகளை வழங்குவதற்காக 1923 ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கத்தின் முகவரலுவலகம் கண்டியில் ஸ்தாபிக்கப்பட்டது. மறைந்த ஸ்ரீ வி.வி.கிரி அவர்கள் 1947 இல் இந்தியா சுதந்திரமடைந்ததன் பின்னர் இலங்கைக்கான முதலாவது இந்திய உயர் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டார், அதற்கு முன்னர் இந்த அலுவகத்தை விசா அதிகாரியாக அவர் தலைமைப் பொறுப்பேற்று சேவையாற்றியிருந்தார். பின்னர் 1969 இல் அவர் இந்திய ஜனாதிபதியாக பதவியேற்றார். 1965 செப்டெம்பரில் இந்த அலுவலகம் கண்டி, இந்திய துணை உயர் ஸ்தானிகராலயமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

***

**கொழும்பு**
**27 மே 2023**